பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**31 12 2025 WEDNESDAY 6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. வளமான, வலிமையான இந்தியாவை உருவாக்க அனைவரும் உறுதியேற்போம் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.

2. தமிழகத்தில் சட்டம் — ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

3. பண்டிகை காலங்களில் தேவைக்கேற்ப கூடுதல் பேருந்துகள் இயக்கப்படும் என்று தமிழக அரசு கூறியுள்ளது.

4. ராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பந்துவீச்சு பிரிவில் இந்தியாவின் **Jasprit Bumrah** தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

**--- இனி விரிவான செய்திகள் ---**

<<<<>>>>>

வளமான, வலிமையான இந்தியாவை உருவாக்க அனைவரும் உறுதியேற்போம் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆங்கில புத்தாண்டு நாளை கொண்டாடப்படுவதையொட்டி, வெளியிட்டுள்ள செய்தியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

வளர்ச்சி, சமூக நல்லிணக்கம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு தொடர்ந்து பணியாற்ற பாடுபட வேண்டும் என்றும் குடியரசுத் தலைவர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதாரச் சட்டம் மாநில அரசுகளுக்கு நீடித்த வளர்ச்சிக்காக உதவிடும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

மாநிலங்கள் சம்பந்தப்பட்ட பகுதிகளின் தேவைக்கேற்ப பணிகளை மேற்கொள்வதற்கான அம்சங்கள் இதில் இடம் பெற்றுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன்மூலம், தேவைக்கேற்ப நிதி ஒதுக்கீடு செய்யப்படுவது உறுதி செய்யப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>>

பாரம்பரிய மருத்துவ முறைக்கு மத்திய அரசு ஊக்கம் அளித்து வருவதாக ஆயுஷ்துறை இணையமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில், இந்த துறை சார்பில் புதிதாக பணியமர்த்தப்பட்டவர்களுடன் மேற்கொண்ட ஆலோசனையின்போது அவர் இதனை தெரிவித்தார்.

பாரம்பரிய மருத்துவ கட்டமைப்பு வசதிகளை மேபடுத்துவதற்கு தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு பிரதாப் ராவ் ஜாதவ் கூறினார்.

<<<<>>>>>

தமிழகத்தில் சட்டம் — ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், திருத்தணியில் ஒடிஷாவை சேர்ந்த இளைஞர் ஒருவர் நான்கு சிறார்களால் தாக்கப்பட்ட சம்பவத்தை சுட்டிக்காட்டினார்.

பெண்கள், சுற்றுலாப் பயணிகள் உட்பட யாருக்கும் பாதுகாப்பு இல்லாத சூழல் தமிழகத்தில் நிலவுவதாக அவர் குறிப்பிட்டார்.

மக்களை பாதுகாக்க வேண்டிய கடமை அரசுக்கு உள்ளதாகவும், இதில் திமுக அரசு தோல்வியடைந்துள்ளதாகவும் டாக்டர் எல். முருகன் கூறினார்.

<<<<>>>>>

பொங்கல் பண்டிகையையொட்டி தேவைக்கேற்ப கூடுதல் பேருந்துகள் இயக்கப்படும் என்று போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சிவசங்கர் கூறியுள்ளார்.

இன்று அரியலூரில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — சிவசங்கர் — 25 Sec. )***

<<<<>>>>>

அஇஅதிமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டம் அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தலைமையில இன்று சென்னையில் நடைபெற்றது.

சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பணிகள் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>>

தமிழகத்தில் காவலர்களுக்கும் பாதுகாப்பு அற்ற சூழல் நிலவுவதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள செய்தியில், திருப்பூர் மாவட்டத்தில் காவலரை மதுபோதையில் இருந்த நபர் கத்தியால் தாக்க முயற்சிக்கும் காணொலி அதிர்ச்சி அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

திமுக அரசின் திறன் அற்ற நிர்வாகம் காரணமாக இந்த சூழல் ஏற்பட்டுள்ளதாக அவர் குறை கூறியுள்ளார்.

சட்டப்பேரவைத் தேர்தலில் மக்கள் இதற்கு உரிய பாடம் புகட்டுவார்கள் என்றும் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>>

ராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — செந்தாமரை கண்ணன் - 33 Sec.*** )

<<<<>>>>>

நாமக்கல் மாவட்டத்தில் பசுமை பரப்பளவை **33** சதவீதமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக வெளியிட்டள்ள காணொலி பதிவில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

***(Sound Byte — துர்கா மூர்த்தி - 35 Sec.)***

<<<<>>>>>

கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை மலர் சந்தையில் புத்தாண்டை முன்னிட்டு பூக்களின் விலை உயர்ந்துள்ளது.

மல்லிகை பூ கிலோ ஒன்றுக்கு **2** ஆயிரத்து **500** ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — குமார் - 40 Sec.)***

<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

சென்னை வால்டாக்ஸ் சாலையில் உள்ள உயர்நிலை பள்ளியில், ஒரு கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைகளை மாநில அமைச்சர் திரு சேகர்பாபு இன்று திறந்துவைத்தார்.

--------------

கன்னியாகுமரி மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் ஆட்சியர் திருமதி அழகுமீனா இன்று பங்கேற்றார்.

-----------------------

மதுரை மாவட்டம் மேலக்குயில்குடியில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் ஆட்சியர் திரு பிரவீன்குமார் பங்கேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

------------

தூத்துக்குடி மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் தெரு விளக்குகள் விரைவில் அமைக்கப்படும் என்று மேயர் திரு ஜெகன் பெரியசாமி கூறியுள்ளார்.

-----------------------

நாமக்கல் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் இன்று நடைபெற்றது.

-----------------

செங்கல்பட்டு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புத்துறையினர் இன்று சோதனை மேற்கொண்டனர்.

----------------

மயிலாடுதுறை மாவட்டம் திருக்கடையூரில் காணும் பொங்கல் அன்று நடைபெறவுள்ள ரேக்ளா பந்தயத்திற்கான ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெற்றது.

--------------

ஒடிஷா மாநிலத்திலிருந்து, தமிழகத்திற்கு லாரியில் கடத்தி வரப்பட்ட போதைப்பொருளை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

-----------------

சென்னை எழும்பூர் — திருநெல்வேலி இடையேயான வந்தேபாரத் விரைவு ரயில் பரிட்சார்த்த அடிப்படையில் நாளை முதல் விருதாச்சலம் ரயில் நிலையத்தில் இரண்டு நிமிடம் நின்று செல்லும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

--------------

சென்னை மெரினா கடற்கரையில் கூட்டுறவு பட்டய பயிற்சியாளர்கள் இன்று தூய்மைப் பணிகளை மேற்கொண்டனர்.

---------------

சென்னை மாநகர காவல்துறை சார்பில் பொதுமக்கள் குறைதீர் முகாம் இன்று நடைபெற்றது.

<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பந்துவீச்சு பிரிவில் இந்தியாவின் **Jasprit Bumrah** தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

-----------------

டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வsதேச தரவரிசை பட்டியலின் மகளிர் பந்துவீச்சு பிரிவில் இந்தியாவின் தீப்தி சர்மா தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

பேட்டிங் பிரிவில் ஷஃபாலி வர்மா ஆறாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

--------------

புரோ மல்யுத்த லீக் போட்டிக்கான வீரர்களின் ஏலம் வரும் சனிக்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

----------------

பெங்களூரு ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Prajwal Dev** நேரடியாக பிரதான சுற்றில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளார்.

**<<<<END>>>>>**